Registered as a Newspaper in Ceylon ★ விலைசதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389
National Tamil Daily
மலர் 10
இதழ் 129
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கிகை ஆனி 6 ரபி: அவ் 22 புதன்கிழமை (19-6-68)

# பல்கலைக்கழக பிரவேசத்துக்கு ஆங்கிலம் கட்டாய பாடமாகும்

## டாக்டர் மலலசேகரா அறிவிப்பு

கொழும்பு, செவ். பல்கலைக் கழகப் பிரவேசப் பரீட்சைக்கு ஆங்கிலம் ஒரு கட்டாய பாடமாக்கப்படும். உயர் கல்வித் தேசிய சபையின் தலைவர் டாக்டர் ஜி. பி மலலசேகரா, இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகப் பிரவேசப் பரீட்சைக்கு ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாக்கும் திட்டம், 1972-ம் ஆண்டில் தற்காலிகமாக அமுலுக்குக் கொண்டுவரப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நடுத்தரப் பாடசாலைகளில் ஆங்கிலம் போதிக்கப்படுவதற்குச் செய்யப்படும் ஒழுங்குகளிலேயே, இத்திட்டத்தின் வெற்றி தங்கியுள்ளதென டாக்டர் மலலசேகரா குறிப்பிட்டார்.

உலக அறிவுக்கு ஆங்கிலம் அத்தியாவசியம் என்பதாலேயே, ஆங்கிலத்தைப் பல்கலைக்கழகப் பிரவேசப் பரீட்சைக்குக் கட்டாய பாடமாக்க முடிவு செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

# ஒற்றையாட்சி, மாவட்டசபை தமிழர் பிரச்னைகளை தீர்க்காது

## குற்றச்செயல்களை ஒழிக்க புதிய பிரிவு

யாழ்ப்பாணம், புதன் வடபகுதியில் அதிகரிக்கும் குற்றச் செயல்களையும், காடைத்தனங்களையும் தடுக்க குற்றத்தடுப்புப் பகுதிக்கென மட்டும் ஓர் உதவிப் பொலிஸ்சுப்பிரீண்டன்ட் நியமிக்கப்படவிருப்பதாகத் தெரிகின்றது.

தற்போது வடபகுதிப் பொலிஸ் சுப்பிரீண்டனின் கீழ் மன்னார்ப்பகுதி, கிளிநொச்சிப்பகுதி, காங்கேசன்துறைப்பகுதி, யாழ்ப்பாணப் பகுதிக்கென நான்கு உதவி பொலிஸ் சுப்பிரீண்டன்கள் கடமையாற்றுகின்றனர். இருப்பினும் 4 பகுதிகளுக்கும் பொதுவாக குற்றத் தடுப்புப் பகுதிக்கென உதவிப் பொலிஸ் சுப்பிரீண்டன் ஒருவரை நியமிப்பதன்மூலம் அதிகரிக்கும் குற்றச்செயல்களை ஒழிக்கலாம் எனப் பொலிஸ் இலாகா நம்புகின்றது.

வடபகுதியில் ஒரு குற்றத் தடுப்புப் பகுதி உதவிபொலிஸ் சுப்பிரீண்டன்ட் பதவி கடந்த பல வருடங்களாக காலியாகவே இருப்பதாக உயர்தர பொலிஸ் அதிகாரி ஒருவர் நேற்றுதெரிவித்தார் புதிய உதவிபொலிஸ் சுப்பிரீண்டனின் நியமனத்தைத் தொடர்ந்து வடபகுதி முழுவதுக்கும் கூட்டு முறையில் புதிய குற்றத்தடுப்பு பொலிஸ் இலாகா ஒன்றும் நிறுவப்படும் எனத் தெரிகின்றது. (ஈ. நி.

## எதிர்காலம் பற்றி முடிவுசெய்ய காலம் கடந்துவிடவில்லை

### திரு. சுந்தரலிங்கம் கருத்து

நல்லூர், புதன்

**"ஒற்றையாட்சி முறையோ, மாவட்டசபை முறையோ ஈழம்வாழ் தமிழ் மக்களின் பிரச்னைகளைத் தீர்த்துவைக்கமாட்டா. மிக நெருக்கடியான கட்டத்திலுள்ள தமிழ் மக்கள் தமது எதிர் காலத்தைப் பற்றி ஓர் உறுதியான முடிவுக்கு வருவதற்கு இன்னும் காலம் கடந்துவிடவில்லை."**

இவ்வாறு வவனியாத் தொகுதி முன்னாள் எம்.பி. யும் ஈழத் தமிழர் இனவிடுதலை இயக்கத்தலைவருமான திரு. செ. சுந்தரலிங்கம் கருத்துத்தெரிவித்திருக்கிறார்.

கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி பழைய மாணவர் சங்க இராப் போசன விருந்தில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே திரு. சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ்வைபவம் நேற்று முன்தினமிரவு நடைபெற்றது.

கல்லூரி அதிபர் திரு. ஈ. கே. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. சுந்தரலிங்கம் மேலும் கூறியதாவது:

'நம் நாட்டின் இக்கால கல்விமுறை ஒரு பகுதியுள்ளவர் மற்றப்பகுதியில் தொழில் பார்த்துக்கொள்ள முடியாதபடி செய்துள்ளது. முந்திய கல்விமுறை ஒருபகுதியிலுள்ளவர் உலகின் எந்தப்பகுதியிலும் தொழில் செய்யக்கூடியதாக இருந்தது.'

தமிழர்கள் மிகவும் நெருக்கடியானதொரு சூழ்நிலையில் இப்போதிருக்கிறார்கள். அவர்களது மத, மொழிச் சுதந்திரங்கள் மறுக்கப்பட்டுள்ளன. சுயமரியாதையிழந்தநிலையிலிருக்கவேண்டிய ஒரு சூழ்நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது.

திருக்கோணமலையிலுள்ள கோணேசர் சிவன்கோவில் இப்போது சிங்கள இராணுவ அணியால் காவல்செய்யப்படுகிறது.

சிங்களத் தேர்ச்சி பெறவில்லையென்ற காரணத்தினால் 3000 அரசாங்க ஊழியர் தமது வேலைகளை இழந்து நிர்க்கதியாகவேண்டிய பரிதாப நிலையிலிருக்கின்றனர். அவர்களது குடும்பங்கள் இதனால் பெரும் சோதனைக்குள்ளாகவிருக்கின்றன.

[6-ம் பக்கம் பார்க்க]

## "சிறுபான்மை தமிழரை மட்டும் அனுமதிக்க மறுப்பதுஏன்?"

### இந்து மாமன்ற உறுப்பினர் கேள்வி

அளவெட்டி, செவ்வாய் தீண்டாதவர்கள் என ஒதுக்கப்படும்சிறுபான்மைத் தமிழர் உள்ளேசென்று வழிபடும் ஆலயங்களில் பூசை செய்யும் பிராமணகுருமார் வேதசிவாகம முறைப்படி நடப்பதாகக் கூறப்படும ஆலயங்களில் பூசைசெய்யலாமா? அப்படிச்செய்ய அனுமதிக்கும் சைவாலய தர்மகர்த்தாக்கள் சிறுபான்மைத் தமிழரைமட்டும ஆலயத்தினுள் நுழைய அனுமதிக்க மறுப்பது ஏன்?

இந்து மாமன்ற ஆலயப் பிரவேச இயக்க நடைமுறைக்குழு உறுப்பினர் திரு. க. ஏரம்பமூர்த்தி சைவாநுட்டான பாதுகாப்புச்சபையினருக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் மேற்கண்டவாறு கேட்டுள்ளார்.

திரு. க. ஏரம்பமூர்த்தி சைவாலய தர்மகர்த்தாக்களுக்கும் அனுட்டான பாதுகாப்புச் சபையினருக்கும் விடுத்துள்ள பகிரங்கவேண்டுகோளில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

சைவத்தையும் வேதசிவாகமங்களையும் பாதுகாக்க முற்பட்டிருப்பவர்கள் பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ள சந்தேகங்களுக்கு விளக்கம் கூறவேண்டியது அவசியம். வேதசிவாகமங்களில் கூறப்பட்டிருக்கும் முறைப்படி வழிபாடு செய்யவேண்டும் என்று மட்டும் கூறிவிட்டால் அவர்களது கடமை தீர்ந்துவிடாது. எப்படி வழிபாடு செய்ய வேண்டுமென்பதனை ஒவ்வொரு ஆலயத்திலும் பகிரங்கப்படுத்தவதுடன் அதனை அவதானிக்கவும் வேண்டும். அவ்வாறு நடக்காது தவறுபவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுவதும அவசியமானது மட்டுமல்ல வரவேற்கத்தக்கதுமாகும்.

சைவத்துக்கு முற்றிலும் விரோதமாக பஞ்சமாபாதகங்களில் ஒன்றான உயிர்க்கொலை செய்வோர்களை ஆலயத்தினுள் நுழைய அனுமதிப்பது மட்டும் சைவத்துக்கு விரோதமில்லையா?

## அமைச்சர் 'திரு' கலந்துகொள்வார்

குரும்பசிட்டி, செவ். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி நிறுவியவர் நினைவு நாளும் வருடாந்த பரிசளிப்பு விழாவும் இம்மாதம் 24-ம் திகதி கல்லூரி திறந்த வெளி அரங்கில் நடைபெறவிருக்கின்றது. உள்ளூராட்சி மந்திரி திரு. எம். திருச்செல்வம் இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார் திரு. எம். வைரமுத்து ஸ்தாபகர் நினைவு நாள் [illegible] திருமதி [illegible] திருச்செல்வம் பரிசில் வழங்குவார்.

## அரசாங்க அதிபருக்கு வெள்ளி யாழ் பரிசு

### பிரிந்து செல்பவருக்கு இசையாளர் அன்பளிப்பர்

அளவெட்டி, செவ். யாழ். மாவட்ட கலைஞர்களுக்கு ஊக்கமளித்து, கலைஞர்களைக் கௌரவித்த வடமாகாண அரசாங்க அதிபருக்கு ஆயிரம் ரூபாய் பெறுமதியான கலைநுட்பம் நிறைந்த வெள்ளியால் ஆக்கப்பட்ட யாழ். ஒன்றை அளித்து தமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளப் போகிறது, யாழ். மாவட்டத்திலுள்ள 22 நாட்டிய இசை சங்கங்கள்.

அடுத்தமாதம் முதல் தபால் மா அதிகாரியாக பதவி உயர்வுபெற்றுச் செல்லும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு பிரிவு உபசார விழா ஒன்றை நடத்துவதற்கென ஒரு செயற்குழுவைத் தெரிவு செய்வதற்காக யாழ். மாவட்டத்தில் உள்ள இசை விற்பனர்கள், நாட்டிய விற்பனர்கள் அடங்கிய 22 சங்கங்கள் நேற்று யாழ்ப்பாணத்தில்கூடி மேற்கண்ட முடிவுசெய்தன.

இக்கூட்டம் முன்னாள் செனட்டர் திரு. ஆர். கனகநாயகம் தலைமையில் ராம் குமாரசுவாமி இல்லத்தில் நடைபெற்றபோது இம்மாத இறுதியில் அரசாங்க அதிபருக்கு சங்கங்கள் சார்பில் யாழ். மத்திய கல்லூரியில் ஒரு பிரிவுபசார விழாவை நடத்துவதற்கு தெரிவு செய்யப்பட்ட செயற்குழு வருமாறு:-

தலைவர்: எஸ். ஆர். கனகநாயகம், காரியதரிசிகள்: திரு. ராம் குமாரசுவாமி, திரு. ஏ. எஸ். இராமநாதன். நாட்டிய இசைச் சங்கங்களைக்கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

ஆன்மீக முயற்சிகளின் நோக்கம் நமக்குள்ளும் வெளியிலும் எங்கும் தெய்வத்தையே காண்பதுதான். 'நான்' என்ற அகந்தை சிறிதும் இருக்கும்வரை இந்தத் தரிசனம் இடைக்க முடியாது. நமக்குள்ளிருக்கும் தெய்வத்திடம் பூரண சரணாகதியடைந்தால், நமது அகந்தை நீங்கி, அந்த மகத்தான தரிசனத்தைப் பெறலாம்.

—சுவாமி ராமதாஸ்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone 389.

சாத்மீகாணம் கீலகவருஷம் ஆனி மாதம் -6ந்திகதி (19-6-68)

# மெஞ்ஞானமும் விஞ்ஞானமும் இணைந்தால் வாழ்வு சிறக்கும்

### மாணவர்களுக்கு கவியோகி அறிவுரை

யாழ்ப்பாணம், புதன்

'மாணவர்களுக்கு மெஞ்ஞான அறிவும் விஞ்ஞான அறிவும் தேவை. இவை இரண்டும் இருந்தால்தான் வாழ்க்கை சீர்சிறக்க முடியும்.'

இவ்வாறு மகரிஷி கவியோகி சுத்தானந்த பாரதி நேற்று வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில மாணவர்கள் மத்தியில் சொற்பொழிவாற்றுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

சமயத்தில் உள்ளம் ஊன்றிடகட்டுப்பாடு தானாக வரும். நெறிப்படுத்தப்பட்ட வாழ்க்கை உயர்ந்துகொண்டேயிருக்கும். மாணவர்கள் தேவையான சில கட்டுப்பாடுகளுடன் வாழ்வதற்கு சமய வளர்ச்சி தேவை.

தெய்வபக்தியுள்ள ஒருவன் தன்னைக் காத்துக்கொள்வதுடன் பிறனையும் பேணிக் காத்துக்கொள்ள முற்படுகின்றான்.

விஞ்ஞானம் துரித கதியில் வளர்ச்சியடைந்துக் கொண்டிருக்கிறது. இதை உணர்ந்து இந்த அறிவைவளர்க்க நாம் முயலவேண்டும். காலவேகத்தின் மாற்றத்தைப் புரிந்து கொண்டு அதற்கு ஈடுகொடுக்க நாம்தயாராகிக்கொள்ள வேண்டும்.

மாணவர்கள் தமக்கும் பிறர்க்கும் நன்மைபயக்கக் கூடியவற்றை எப்போதும் செய்துகொண்டிருக்க வேண்டும்.

சைவசமயம் பற்றி அவர் குறிப்பிட்டுப் பேசுகையில், சைவசமயத்தை எந்தக் கடலும் அள்ளிவிழுங்கமுடியாது என்றும் சைவசமயத்தைக் கட்டுக்கோப்புடன் வளர்க்க வேண்டும்என்றும் குறிப்பிட்டார்.

தலைமைதாங்கிய பொன் முத்துக்குமாரன் இளமையிலேயே கவித்திறமை படைத்த கவியோகியின் வருகை கல்லூரிக்குப்பெருமையைத் தேடித்தந்துள்ளது எனக் குறிப்பிட்டார்.

## "பெண்களினால் தான் அமைதியை ஆக்க முடியும்"

யாழ்ப்பாணம், புதன்

"பெண்களினால் தான் அமைதியை உண்டாக்கமுடியும். இறைவன் பெண்களிடத்தில் சக்தி மயமாகவும் ஆண்களிடத்தில் ஒளி மயமாகவும் நின்று கருணை புரிகின்றான்."

இவ்வாறு யாழ்ப்பாணம் இந்து மகளிர் வித்தியாலயத்தில் கவியோகி சுத்தானந்த பாரதியார் உரையாற்றுகையில் கூறினார்.

செல்வி கே. சந்திரகுமாரி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கவியோகியார் மேலும் பேசுகையில் "ஆரம்ப காலத்தில் பெண்களே விஞ்ஞானத்தைக் கண்டு பிடித்திருக்கின்றனர் என்பதற்குப் பல சான்றுகள் இருக்கின்றன.

பல பாஷைகளைப் படித்திருந்தால் வாதாட வருகின்றவர்களுடன் போட்டியிட்டு வெற்றி பெறலாம். மனித சமுதாயத்திற்கு தொண்டு புரிந்தால் இறைவன் எமக்கு கருணை புரிவார். பெண்கள் ஆண்களுடன் எல்லா விஷயங்களிலும் போட்டி போடாமல் அடக்கமாக இருக்கப் பழக வேண்டும்" என்றார்.

யாழ். ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரியிலும் கவியோகியார் உரையாற்றினார். [ந. நி]

# ஐயாறன் எழுதுவது

"ஓம் ஸ்ரீ சாயி பாபா.
ஓம் ஸ்ரீ சாயி பாபா.
ஓம் ஸ்ரீ சாயி பாபா."

"இதை அலட்சியம் செய்யாமல் 20 பிரதிகளை நகல் செய்து 20 பேருக்கு 10 நாட்களில் அனுப்பினால் பெரும் செல்வம் வந்து சேரும். அலட்சியம் செய்தால் ஆபத்து நேரும். ஐக்கிய அமெரிக்கக் குடியரசு ஜெனரல் பிராங்க் 620000 டாலர் பரிசு பெற்றார். ஆனால் இதை அலட்சியம் செய்ததால் இறந்தார். கொழும்பைச் சேர்ந்த ஒருவர் நகல்செய்து அனுப்பி 12வது சுவீப்பில் முதல்பரிசு பெற்றார். இவையாவும் உண்மை."

ஸ்ரீ சாயி பாபா.

என்ற ஒரு தபாலட்டை நேற்று எனக்குக் கிடைத்தது. இந்த மாதிரி 'செயின் லெட்டர்' எனும் சங்கிலிக் கடிதங்கள் பன்முறையும் கிடைத்துள்ளன. ஒரு பக்கம் ஆசைகாட்டியும், மறு பக்கம் பயமுறுத்தியும் செய்யும் இந்தப் பிரசாரத்தை மதிக்காமல், அக்கடிதங்களை ஒதுக்கி மறந்துவிடுவது வழக்கம்.

ஆனால் இம்முறை 'ஸ்ரீ சாயி பாபா' என்று தமிழில் கையெழுத்திட்டே இத் தபால் அட்டை கிடைத்ததால், இங்குள்ள ஒரு சாயி பாபா பக்தரை இதுபற்றிக் கேட்டேன். அவர் என்ன சொன்னார் தெரியுமா? இந்த மாதிரிக் கடிதங்களை ஸ்ரீ சாயி பாபா ஒருக்காலும் எழுத அனுமதிக்கமாட்டாரென்றும், தமது பெயரைச் சிலர் துஷ்பிரயோகஞ் செய்துவருவதாயும், அதையெல்லாம் நம்பவேண்டாம் என்றும், 'சனாதன சாரதி' என்ற சஞ்சிகையில் ஸ்ரீ சாயிபாபாவே கேட்டுள்ளதாயும் தெரிவித்து, இவ்விஷயத்தில் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்றும் சொன்னார்.

ஃ ஃ ஃ

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பேத்தி திருமதி விஜயபாரதியும், அவர் கணவரும் சிலமாதங்களுக்கு முன் இலங்கையில் சுற்றுப் பிரயாணஞ்செய்து, பல பொதுநிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினார்கள். இந்த இலங்கை விஜயம் தன் வாழ்க்கையின் மறக்கமுடியாத நிகழ்ச்சிகளில் ஒன்று என்று சென்னையிலே உலகத் தமிழ்விழாவின்போது அவரை நேரில் சந்திக்கையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். 'பக்கத்திலிருந்த அவரது கணவரர் சுந்தரராஜன் அவர்கள், ஈழத்து ரசிகமணி கனக. செந்திநாதன் அவர்கள் எழுதிய ஒரு நூலைக் குறிப்பிட்டு "அது உலக இலக்கியத்தரம் பெற்றது" என்று போற்றினார்.

திருமதி விஜயபாரதி இப்போது 'டாக்டர்' பாரதியாகியுள்ளது மகிழ்ச்சிக்குரியதாகும். பாரதியாரின் நூல்களைப் பற்றி அவர் "எ கிரிடிகல் ஸ்டடி ஆப் பாரதீஸ் வர்க்ஸ்" என்று ஆங்கிலத்தில் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைக்கு தகுதிச்சான்று அளித்து அண்ணாமலைப் பல்கலைக்கழகம் "பி. எச். டி." பட்டம் அளித்திருக்கிறது. தமிழிலும், ஆங்கிலத்திலும் இந்நூல் சீக்கிரத்தில் வெளியிடப்படுமாம்.

பாரதியார் அவர்கள் இன்று இருந்தால் தமது பேத்தியைப் பற்றி எவ்வளவு பெருமைப்படுவார்! டாக்டர் (திருமதி) விஜய பாரதிக்கு ஈழத் தமிழரின்

(4-ம் கலம்பார்க்க)

## சுகாதாரவாரம்

ஆண்டுக்குஒருதடவை ஒரு வாரத்தை சுகாதார வாரமாகக் கொண்டாடும் சுகாதார சேவைப் பகுதியினர், நேற்றுடன் ஆரம்பமான இந்த வாரத்தை இவ்வருட சுகாதார வாரமாகக் கொண்டாடத் தொடங்கியுள்ளனர். ஒரு வருடத்தில் ஒரு வாரத்தில் மட்டும் தான் சுகாதாரத்தில் கவனம்செலுத்துவதால்தான் நாட்டில் நோயாளர் தொகை அதிகரித்துவருகிறது போலும்!

'வருமுன் காப்போனை' சுகாதார சேவைப் பகுதியினரும் அரசாங்கமும், மக்களும் இருப்பதால் தான்நோயாளர் தொகை வெகுவாக அதிகரிக்கின்றது. நாட்டிலுள்ள ஆஸ்பத்திரிகள் விஸ்தரிக்கப்பட்டாலும் அவற்றில் இடநெருக்கடி பெரும் பிரச்சினையாக உருவாகிக் கொண்டிருக்கிறது. 'வருமுன் காப்போனை' சுகாதார சேவைப் பகுதியினரும் அரசாங்கமும் மக்களும் நடத்துகொண்டால் நோயாளர்தொகை இந்த அளவுக்குப் பெருகமாட்டாது. ஆஸ்பத்திரிகளிலும் இடநெருக்கடி ஏற்படமாட்டாது. 'சுத்தம் சுகம் தரும்' என்பது முதுமொழி. இதற்கிணங்க மக்கள் நடந்துகொள்ள வேண்டும். இதற்கு வழி காட்டுவது சுகாதார சேவைப் பகுதியினரினதும் அரசாங்கத்தினதும் கடமையும் பொறுப்புமாகும்.

வீதிகளில் குப்பை கூழங்களைக் கொட்டிக் குவிப்பதும், கண்ட கண்ட இடங்களிலெல்லாம் எச்சில் உமிழ்வதும் சுகாதாரத்துக்குக் கேடு. இதை ஓரளவு படித்தவர்கள் தான் தெரிந்துள்ளனர். ஆனாலும் பழக்க தோஷமோ என்னவோ அவர்களும் இத் தவறைச்செய்துவருகின்றனர். சுகாதாரம் பற்றிப் பாடசாலைகளில் வெறும் ஏட்டுக் கல்வி அளிக்காமல் மாணவர்களுக்கு நல்ல முறையில் இவற்றை எடுத்துக் கூறக் கூடிய ஒழுங்குகளைக் கல்வி அமைச்சு மேற்கொண்டால் பிள்ளைகள் மட்டுமல்ல அவர்கள் மூலம் பெரியோரும் தங்கள் தவறுகளைத் திருத்திக் கொள்ள முடியும்.

சுகாதாரமான வாழ்க்கையின் அவசியத்தைப் பாடசாலைப் பிள்ளைகள் மத்தியில் மட்டுமல்லாது கிராமம் கிராமமாகப் பிரசாரம் செய்ய வேண்டியதுடன் இன்று நோயாளர் தொகை அதிகரித்துவருவதற்கு போஷாக்கின்மை ஒரு முக்கிய காரணமென்பதையும் உணர்ந்து, போஷாக்கான உணவு உட்கொள்வதற்கும் சுகாதார சேவைப் பகுதியினர் வழிகாட்டவேண்டும்.

சுகாதார சேவைப் பகுதியினருக்கு முன்னரே யாழ்ப்பாண மாநகர சபையினர் குடிநல சுகாதார வாரம் கொண்டாடினர். நகரைஎவ்வாறு அழகாக வைத்திருக்க வேண்டுமென்பதையும் சுகாதாரமான வாழ்வின் அவசியத்தையும் இந்தக் கொண்டாட்டத்தில் பல வழிகளிலும் எடுத்துக் கூறினர். பாடசாலைப் பிள்ளைகளைக் கொண்டு வீதிச்சுவர்களில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளை அகற்றி நகரின் அழகுக்கு மெருகூட்டினர். ஆயினும் என்ன? குடிநலசுகாதார வாரத்தில் அகற்றப்பட்ட சுவரொட்டிகள் மீண்டும் காட்சியளிக்கத் தொடங்கியுள்ளன. நகரின் அழகு குலைந்து அலங்கோலமாகக் காட்சியளிக்கிறது.

சுகாதார வாரமோ, குடிநலவாரமோ ஆண்டுக்கொரு தடவை கொண்டாடினால் போதாது. வருடாவருடம்முழுவதும் மக்களுக்கு இவற்றின் அவசியத்தை உணர்த்தி அவர்களின் உதவியுடனும் ஒத்துழைப்புடனும் மக்களை சுகாதார வாழ்வு வாழவும், நகரையும் நாட்டையும் சுத்தமாக வைத்திருக்கவும் அந்தந்தப்பகுதி உள்ளூராட்சி மன்றங்களும் சுகாதார சேவைப்பகுதியினரும் அரசாங்கமும் [illegible] மளிப்பது [illegible] கடமை.

## சம்பந்தர் குருபூசை

யாழ்ப்பாணம், புதன்

கொக்குவில் இராமகிருஷ்ண சைவவித்தியாலயத்தில் கடந்தவாரம் திருஞான சம்பந்தர் குருபூசை நடைபெற்றது. உபந்நியாசங்கள், பேச்சுக்கள் முதலியன விசேஷ நிகழ்ச்சியாக இடம் பெற்றன. [ந. நி.]

## பிரசாரக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் பிரசாரக் கூட்டம் இம்மாதம் 23-ந் திகதி சாவகச்சேரியிலும், 24-ந் திகதி காரைநகரிலும் நடைபெறவிருக்கின்றது. [ந. நி.]

# "தமிழ் உலகம் இவர்கள் வலையில் சிக்கக்கூடாது"

### உதவி அரசாங்க அதிபர் எச்சரிக்கை

உடுவில், செவ்வாய்

"தமிழ் மொழியினுடைய மறுமலர்ச்சி ஆரம்பித்து விட்டது; இதன் தொடர்பாக நடனம், சங்கீதம், நாடகம் முதலிய தமிழ் மக்களின் பரம்பரைத்தொடர்பான கர்நாடக முறையைக் கடைப்பிடிக்கவேண்டும். இதனோடு சைவ மறுமலர்ச்சியும் தொடர்ந்து வரவேண்டும்."

இவ்வாறு இணுவில் இசை நடன கல்லூரிகளின் கலை நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப்பேசிய யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை கூறினார்.

உடுவில் கிராமசபை திறந்தவெளியரங்கில் இப்பாடசாலை மாணவ மாணவிகளின் மிருதங்கம், கர்நாடக சங்கீதம், கிராமிய நடனம் முதலிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

உதவி அரசாங்க அதிபர் மேலும் பேசியதாவது:-

சமித்திரசம்பந்தமான சூழ்நிலையில் மேலைநாட்டு கலாசாரங்களுக்கும் சமய அடிப்படைக்கும் ஆளானவர்கள் தற்போதைய சூழ்நிலையை உபயோகப்படுத்தி புதிய மாற்றங்களையும் விநோதமான திருப்பங்களையும் கொடுத்து தமிழ்மொழி, சமயத்தோடும், நடன சங்கீதக் கலைகளோடும்தொடர்பானதல்ல என்று ஒரு புதிய விளக்கமும் விநோதமான வழக்கத்தையும் உண்டு பண்ண எத்தனிக்கிறார்கள். தமிழ் உலகம் இவர்களின் வலையில்சிக்காது தப்பித்துக் கொள்ளமுயலவேண்டும்.

தேவாரத்தோடு ஆரம்பிக்கும் நிகழ்ச்சிகள் தற்போது தமிழ்த்தாய்வணக்கம் என்ற புதியமுறையோடு ஆரம்பமாவதைக்காண்கிறோம். இதெல்லாம்தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் ஏதுவாயிருக்கமாட்டாது.

திரு. [illegible] பேசினார்.

## தமிழரசு செயற்குழுகூடும்

யாழ்ப்பாணம், புதன்

மாவட்டசபை மசோதா வெள்ளை அறிக்கை பாராளுமன்றத்தில்சமர்ப்பிக்கப்பட்டதைத்தொடர்ந்து ஏற்பட்டுள்ள நிலைபற்றிஆராய தமிழரசுக்கட்சிச் செயற்குழு அடுத்தமாதம் 2-ந் திகதி கூடவிருக்கின்றது.

கொழும்பில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் மாவட்டசபை நகல் மசோதாவில் செய்யப்படவிருக்கும் சில திருத்தங்கள் பற்றியும், அதைஎவ்வகையில்பிரதமரிடம் எடுத்துக் கூறுவது என்பதுபற்றியும் பரிசீலனை செய்யப்படவிருப்பதாக நம்பகரமாகத் தெரியவந்துள்ளது;

இக்கூட்டம் இம்மாதம் 24-ந் திகதி மட்டக்களப்பில் நடைபெற முன்னர் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. (கா. நி.)

## யாழ். மாவட்ட புதிய அதிபர்

உடுவில், செவ்வாய்

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு புதிய அரசாங்க அதிபராக திரு. ஹட்டிக்கின்ஸ் நியமிக்கப்படலாம் எனத் தெரியவருகிறது.

(5-ம் கலந் தொடர்ச்சி)

பாராட்டையும், வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

ஃ ஃ ஃ

அனு சயப் பட்டது இது வென்னாதே
கனி மனத்தொடு கண்களும் நீர்மல்கிப்
புனிதனைப் பூவணநாரனைப்
போற்றுவார்
மனிதரில் தலையான மனிதரே.

—அப்பர் சுவாமிகள்

கனிந்த மனத்தோடு கண்கள் நீர் நிறைந்து மனதில் ஐயப்பாடு சிறிதுமின்றி பூவணத்தில் கோயில்கொண்டிருக்கும் புனிதனைப் போற்றி வழிபடுபவர், மனிதரில் தலையாய மனிதரவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணு ஆயுத பரவல்தடை ஒப்பந்தம்

# கைச்சாத்திடும் நாடுகளுக்கு அபயம் அளிப்பதாக மூவல்லரசுகள் உறுதி மொழி

## பிரிட்டிஷ், அமெரிக்க, சோவியத் கருத்தை பிரான்ஸ் ஏற்கவில்லை

நியூயோர்க், ஜூன் 18
நேற்றிரவு, ஐ. நா. பந்தோபஸ்து சபை கூடிய போது, அணு ஆயுத பரவல் தடை நகல் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் எந்த நாட்டுக்கும், அணு ஆயுத ஆக்கிரமிப்புப் பயமுறுத்த லுக்கெதிராகப் பாதுகாப்பு அளிப்பதென ரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய மூன்று நாடுகளும் முறையான உறுதிமொழி அளித்தன.

ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் எந்த நாடும், அணு ஆயுத ஆக்கிரமிப்பை எதிர் நோக்கினால், அதைப்பாதுகாப்பதற்கான உடனடி ஐ. நா. பந்தோபஸ்து சபை நடவடிக்கைக்குத் தாம் வழி செய்வதாக இம்மூன்று நாடுகளும் உறுதியளித்தன

இம்மூன்று நாடுகளினதும் உறுதிமொழி பற்றிய விவாதத்தை, ஐ. நா. பந்தோபஸ்துசபை இன்றிரவுவரை ஒத்திப்போட்டுள்ளது.

### பிரான்ஸ் கருத்து

பந்தோபஸ்துசபையில், பிரெஞ்சுப்பிரதிநிதி பேசுகையில், உலகில் அணு ஆயுதப்பரவலைத்தடைசெய்வதற்கு ஒரே வழி, அணு ஆயுத கையிருப்புகளைக் குறைப்பதேயாகும் என்று வலியுறுத்தினார்.

ஐ. நா. பொதுச்சபையில் அணு ஆயுத பரவல் தடை நகல் ஒப்பந்தம். வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது, பிரான்ஸ் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. பந்தோபஸ்து சபை வாக்கெடுப்பிலும் பிரான்ஸ் கலந்து கொள்ளமாட்டாது என்பதைப் பிரெஞ்சுப் பிரதிநிதி தெளிவாக்கினார். இந்தியாவும். பிரான்ஸைப் போலவே, வாக்கெடுப்பில் கலந்துகொள்ளமாட்டாது என்று தெரிகிறது.

### 'சரித்திர க்கிய சம்பவம்'

ரஷ்யா' பிரிட்டன், அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளும், அணு ஆயுத ஆக்கிரமிப்புக்கெதிராகப் பாதுகப்பளிப்பதென, ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நாடுகளுக்கு அளித்துள்ள வாக்குறுதி பற்றி அமெரிக்கப் பிரதிநிதி திரு. கோல்ட்பேர்க் பேசுகையில், 'சரித்திரமுக்கியத்துவம் பெற்ற சம்பவம்' எனக் குறிப்பிட்டார்.

## இந்திரா காந்தியின் லத்தீன் அமெரிக்க பிரயாணம்

புதுடில்லி, ஜூன் 18
இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தி அடுத்த செப்டம்பர் மாதத்தில் லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு மூன்று வார விஜயத்தில் செல்வாரென அறிவிக்கப் பட்டுள்ளது.

ஆர்ஜென்டீனா, பெரு, கொலம்பியா மற்றும் பல லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு இந்தியப் பிரதமர் செல்வார்.

---

## "தீண்டாமை ஒழியுமட்டும் மா. சபை வேண்டாம்"

யாழ்ப்பாணம், புதன்
தீண்டாமை என்னும் நோய் நீங்குமட்டும் மாவட்ட சபை மசோதாவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டாம் என்றும் தீண்டாமை என்னும் பேதம் நீக்கச்செய்வதற்குஒரு விசாரணைக் குழுவை நியமித்து, விசாரணைசெய்து குறையை நிவர்த்தி செய்யும்படியும் கோரும் மகஜரொன்றை பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகாவுக்கு, திரு. கதிரவேலு தலைமையில் கூடிய சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி அனுப்பிவைத்துள்ளது.

பிரான்ஸில்

## பெரும்பான்மை தொழிலாளர் வேலைக்குத் திரும்பிவிட்டனர்

பாரிஸ், ஜூன் 18
பிரான்ஸில், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட சுமார் ஒரு கோடி தொழிலாளர்களின் பெரும்பான்மையினர் வேலைக்குத் திரும்பிவிட்டனர்.

பிரசித்தி பெற்ற பிரெஞ்சுக்காரரான 'றெனோல்ற்' கார் உற்பத்தித் தொழிற்சாலைத் தொழிலாளர்களும், பெரும்பான்மை வாக்குகளால், வேலைக்குத் திரும்புவதெனத் தீர்மானித்துள்ளனர்.

இதற்கிடையில், பிரெஞ்சுத் தலைநகரான பாரிஸில் கூடிய மாணவர்கள், பொலிசார் தம்மைத் தூண்டிவிடாத பட்சத்தில், தமது தெரு ஆர்ப்பாட்டங்களைத் தாம் கைவிட்டுவிடுவதாக உறுதியளித்தனர்.

ஸோபேன் பல்கலைக்கழகத்தை அரசாங்கம் பிடித்து வைத்திருப்பதை மாணவர் கண்டித்தனர். இந்தச் சூழ்நிலையில், அரசாங்கத்துடன் தம் பேச்சுவார்த்தைகளை நடத்த முடியாதென்று மாணவர்கள் தெரிவித்தனர்.

## மத்திய பிரதேச இரு உப-தேர்தலில் காங்கிரஸ் தோல்வி

லக்னோ, ஜூன் 18
இந்திய மத்தியப் பிரதேச ராஜ்யத்தில் நடைபெற்றுள்ள இரண்டு உப தேர்தல்களில், காங்கிரஸ் கட்சி தோல்வியடைந்துள்ளது.

ஒரு உப தேர்தலில், ஜனசங் அபேட்சகர் ஒருவர், தமக்கு எதிராகப் போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகரை 5,000க்குமதிகமான பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடித்துள்ளார்.

மற்றுமொரு உப தேர்தலில், காங்கிரஸ் அபேட்சகரை ஒரு சுயேச்சை அபேட்சகர் தோற்கடித்துள்ளார்.

இந்த இரண்டு ஸ்தானங்களிலும், கடந்த பொதுத் தேர்தலில் காங்கிரஸே வெற்றியீட்டியிருந்தது.

## ஜோர்தான் எல்லையில் 70,000 இஸ்ரேல் துருப்புகள்

### எல்லைக் கிராமத்தைத் தாக்கியதாக லெபனன் குற்றச்சாட்டு

அம்மான், ஜூன் 18
ஜோர்தானிய நகரொன்றைத் தாக்குவதற்கென இஸ்ரேல் 70,000 துருப்புகளை, ஜோர்தான்-இஸ்ரேல் எல்லையில் நிறுத்தியுள்ளதாக அம்மான் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிரியாவுக்கும்ஜோர்தானுக்குமிடையே ஒரு தொடர்பு நிலையமாக விளங்கும் இந்த ஜோர்தான் நகரை அழிப்பதன்மூலம், ஜோர்தானைத் தனிப்படுத்துவது இஸ்ரேலின் நோக்கமாகும் எனவும் அச்செய்திகள் கூறுகின்றன.

இச்செய்திகள் ஆதாரமற்றவை என இஸ்ரேல் வட்டாரங்கள் கூறியுள்ளன.

கடந்த வாரம், தனது எல்லைப்புறக் கிராமமொன்றின் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதாக லெபனன் குற்றம்சாட்டியுள்ளது.

இத்தாக்குதலில், நால்வர் காயமுற்றுள்ளதாகவும் லெபனன் கூறியுள்ளது.

### கார்டூமில்

இஸ்ரேலுக்குச் சாதகமாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாக ஐ. நா. சபையைக் கார்டூம் பார்லிமெண்ட் கண்டித்துள்ளது.

## பிரிட்டனின் முதலாவது மாற்று இருதயக்காரர் மரணம்

லண்டன், ஜூன் 18
பிரிட்டனின் முதலாவது மாற்று இருதயப் பொருத்துக்காரரான பிரெடிரிக் வெஸ்ட் இறந்துவிட்டார். இவர் சிறுநீரக நோயினால் பீடிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

அவருக்கு இருதயப்பொருத்தம் செய்யப்பட்டு 45 நாட்களுக்குப் பிறகு அவர் மரணமாகியுள்ளார்.

### தென்னாபிரிக்க நோயாளி

தென்னாபிரிக்காவில், உலகிலேயே அதிக நாட்கள் உயிர்வாழும் மாற்று இருதயப் பொருத்தக்காரரான டாக்டர் பிளெய் பேர்க்கின் உடல் நிலை முன்னேறிவருவதாக, அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

அஸ்ஸாம் எல்லைப்புறத்தில்

## ஆயுதந்தாங்கியபாகிஸ்தானியர் 3 பெண்களடங்கிய ஐவரைப் பிடித்துச்சென்றனர்

ஷில்லொங், ஜூன் 18
இம்மாதம் 11ந் திகதியன்று, ஆயுதந் தாங்கிய 15 பாகிஸ்தானியர், அஸ்ஸாம் எல்லைப்புறக் கிராமம் ஒன்றில் புகுந்து, ஐந்து கிராமவாசிகளைப் பிடித்துக் கொண்டு சென்றுவிட்டதாக அஸ்ஸாம் செய்திகள் தெரிவிக்கின்றன

இந்த ஐந்து பேர்களில், மூன்று பெண்களும் இரண்டு ஆண்களும் அடங்கியுள்ளனர்.

இவர்களில், நான்கு பேரைப் பாகிஸ்தானியர் திருப்பி அனுப்பிவிட்டதாகவும், ஒரே ஒரு பெண்ணை மட்டும் அவர்கள் வைத்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தையிட்டு அஸ்ஸாம் அரசாங்கம், பாகிஸ்தானிடம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

---

### சைவ இளைஞர் கழக உறுப்பினர்கள்

உடுவில். செவ்.
கொக்குவில் இந்துக் கல்லூரியின் சைவ இளைஞர் கழகத்தினரின் கூட்டம் நடைபெற்றபோது புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்,

தலைவர் திரு. எம், சின்னத்தம்பி, பொதுச் செயலாளர் திரு. எஸ். வேலாயுதபிள்ளை, உபசெயலாளர்திரு எள். இராஜகுலசிங்கம், பொருளாளர் திரு. கே. தனபாலசிங்கம்!

தென் வியட்னும்

## ஜனாதிபதி தியூவின் ஆட்சியைக் கவிழ்க்க காகீ முயற்சி?

சைகோன், ஜூன் 18
தென் வியட்னும் ஜனாதிபதி தியூவின் ஆட்சியை இராணுவப் புரட்சியொன்றின் மூலம் கவிழ்க்க, உப ஜனாதிபதி காகீ ஒரு திட்டம் வகுத்துள்ளதாகச் சில வதந்திகள் இங்கு பரவியுள்ளன

காகியின் ஆதரவாளர்கள், இவ்வதந்திகளில் எவ்வித உண்மையுமில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி தியூவின் ஆட்சியை உப ஜனாதிபதி காகீ கவிழ்க்க திட்டமிட்டுள்ளார் என்பது வியட்கொங்கியர் கட்டவிழ்த்து விட்டுள்ள கதையேயெனத் தென் வியட்னும் அரசியல்வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

## புதுடில்லியில் தீ விபத்து

### இரண்டரைலட்சம் ரூபா நஷ்டம்

புதுடில்லி, ஜூன் 18
புதுடில்லியில் நேற்று நடைபெற்ற ஒரு தீ விபத்தில், சுமார் இரண்டரை லட்சம் ரூபாய் பெறுமதியான உடைமைகள் இழக்கப்பட்டன.

இத் தீ விபத்தில் 10 வீடுகள், நான்கு கடைகள், மற்றும் சிலகட்டடங்கள் எரிந்து சாம்பராகின.

விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவில்லை.

## ரொடீஷியாவுக்கெதிரான பிரிட்டிஷ் தடைகள்

### காமன்ஸ் சபை அங்கீகரித்தது

லண்டன், ஜூன் 18
சட்டவிரோத ரொடீஷிய ஆட்சிக்கெதிராக பிரிட்டிஷ் அரசாங்கம் விதித்துள்ள புதிய தடைகளுக்குப் பிரிட்டிஷ் காமன்ஸ் சபை தனது அங்கீகாரத்தை அளித்துள்ளது. புதிய விதிகளுக்கு ஆதரவாக 73 பெரும்பான்மை வாக்குகள் கிடைத்தன.

ஆனால் புதிய விதிகளை எதிர்ப்பதென பிரபுக்கள் சபையிலுள்ள கன்சர்வேடிவ் பெரும்பான்மையினர் தீர்மானித்துள்ளது.

இவ்விதம் பிரபுக்கள்சபை எதிர்த்தால், அச்சபையின் எதிர்காலம் பற்றிய ஒரு தீர்க்கமான முடிவை காமன்ஸ் சபை எடுக்கவேண்டிய நிலை ஏற்படலாமென அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

பிரபுக்கள் சபையை அறவே நீக்கிவிடவேண்டுமெனக் கோரும் தொழிற்கட்சி அங்கத்தவர் ஒருவரின் பிரேரணையொன்று ஏற்கனவே காமன்ஸ் சபையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சுருக்கம்

### அமைச்சர் உத்தரவு

பீடிப்புகையிலை உற்பத்தியாளர்களின் குறைபாடுகளை உடனடியாக விசாரிக்குமாறு உள்நாட்டு மந்திரி டாக்டர் டபிள்யூ தஹநாயக்கா உத்தரவிட்டார். பீடிப் புகையிலைக்குப் பீடி உற்பத்தியாளர்கள் நியாயமான விலை கொடுப்பதில்லையென்று புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்தே விசாரணை நடத்துமாறு அமைச்சர் உத்தரவிட்டார்.

### வேலைகள் பாதிக்கப்படவில்லை

திருகோணமலை கூட்டுறவு வங்கியைச்சேர்ந்த 39 உத்தியோகத்தர்களில் 15 பேர் மட்டுமே வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள். எனவே திருகோணமலை வங்கியிலும் கந்தளாய் மூதூர் கிண்ணியா ஆகிய இடங்களில் உள்ள கிளை வங்கிகளிலும் வேலைகள் வழமைபோல் நடைபெற்றுவருவதாக திருகோணமலை மாவட்ட கூட்டுறவு வங்கி லிமிட்டெட் தலைவர் வி. ஆர்: நவரத்தினராசா அறிவித்துள்ளார்.

### வழக்கறிஞர் சவால்

சிங்களவருடைய காணிகளை தமிழர்கள் அபகரிக்கிறார்களா? இல்லை தமிழர்களுடைய பூமியை சிங்களவர் ஆக்கிரமிக்கிறார்களா? இதில் உண்மை எது என்பதை தம்முடன் வாதாட வருமாறு முன்னை நாள் பிரதம நீதியரசர் திரு. ஹேமா பஸநாயக்காவுக்கு பகிரங்க சவால் விட்டிருக்கிறார் திருகோணமலை வழக்கறிஞர் பா. நேமிநாதன்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 19-6-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

844 மீற்றர் அல் 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-40 அதிப் பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

844 மீற்றர் அல் 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம் 1-00 மாதர் கேட்டவை.

844 மீற்றர் அல் 61 மீற்றர்

இரவு 6-15 பாட்டு-ஏ. வேலுசாமி, 6-45 பாவளம், 7-00 கிராமமஞ்சிகை, 7-30 நேயர் கடிதங்கள், 7-45 நாடகம், 8 00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பல்கலைக்கழக மாணவருக்கான விரிவுரை, 9-45 நேயர் விருப்பம்.

## "உங்களுக்காக"

குருநகரில் நடைபெற்ற ஆட்சேபக் கூட்டமொன்றில் யாழ்ப்பாணம் எம். பி. திரு ஜி. ஜி பொன்னம்பலம், 'மாநகரசபை உங்களுக்கெதிராக வழக்குத்தொடர்ந்து உங்களைச் சிறைக்கு அனுப்பினால் உங்களை மீட்க, உங்களுக்கு எதிராக வாதாடத் தயாராகவுள்ளேன்' என்று பேசியதாக இம்மாதம் 12-ம் தேதி 'ஈழநாடு' இதழில் வெளியான செய்தி தவறு. 'உங்களை மீட்க உங்களுக்காக வாதாடத்தயாராகவுள்ளேன்' என்றுதான் திரு. பொன்னம்பலம் அக் கூட்டத்தில் பேசினார்.

### மரவரிமுறை நீடிக்கும்

மரவரிமுறையை தொடர்ந்து நீடிப்பதற்கு உள்நாட்டு மந்திரி இணக்கம் தெரிவித்திருப்பதாக வடஇலங்கை கள்ளிறக்கும் தொழிலாளர் சங்க தூதுக்குழு தெரிவித்துள்ளது- வடஇலங்கையிலுள்ள கள்ளிறக்கும் தொழிலாளர் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்னைகள் குறித்து, மேற்படி சங்கம், உள்நாட்டமைச்சர் டாக்டர் டபிள்யூ தஹநாயக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தியது.

### மீன்பிடி பயிற்சி

இலங்கையிலுள்ள சகல பாடசாலைகளிலும் உயர்கல்விப்பீடங்களிலும் மீன்பிடிப் பயிற்சியை முக்கிய பாடமாகப் போதிக்கவேண்டும் என்று பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர் ஏ. சி. ஜே. வீரக்கோன் தெரிவித்தார். நமது நாட்டின் விஞ்ஞான வளர்ச்சியற்றி அக்கறை கொண்டுள்ள இவ்வேளையில் பல்கலைக்கழக விஞ்ஞானபகுதியை மூடிவிடுவதுபற்றிப் பிரச்னை எழுந்துள்ளது கவலைக்குரியது என அவர் தெரிவித்தார்.

### கல்விஇலாகா மறுப்பு

அண்மையில் வெளியான கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண பரீட்சை பெறுபேறுகளில் பெருமளவு தவறுகள் இருந்ததென கூறுவதில் எவ்வித உண்மையுமில்லையெனக் கல்வி இலாகாவின் பரீட்சைப் பகுதி தெரிவித்துள்ளது. இதுவரை பரீட்சைப் பகுதியினருக்கு எதுவித முறைப்பாடுகளும் பாடசாலைகளிலிருந்தோ தனிப்பட்ட பரீட்சார்த்திகளிடமிருந்தோ வரவில்லையென்று மேலும் தெரிவிக்கப்படுள்ளது.

### கத்தியால் குத்திக்கொலை

மூதூர் வட்டாரத்தைச் சேர்ந்த சூரியன் குடியேற்றத்திட்டத்தில், கே. சுந்தரநாயகம் என்பவர் கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டார். பலநாள் பகையின் காரணமாகவே இக்கொலை நடந்ததாகக் கூறப்படுகிறது. இக்கொலை சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் பொன்னையா திருநாவுக்கரசு என்பவரை கைது செய்து காவலில் வைத்துள்ள மூதூர் பொலிஸார் புலன் விசாரணையை தொடர்கிறார்கள்.

### சிறுமி மரணம்

பியூபிட்டியா என்ற வட்டாரத்தின் ஹக்குமுர எனபவரின் மகளான ராஜாபிந்தன் என்ற சிறுமி லொறி விபத்தில் சிக்கி மரணமானாள். காலஞ்சென்ற சிறுமி வீதியைக் கடக்கும்போது எதிரே வந்துகொண்டிருந்த லொறியொன்று முட்டி மோதியதாம். தூக்கி எறியப்பட்ட அவள் ஸ்தலத்திலேயே துடிதுடித்து இறந்தாள. இது சம்பந்தமாக லொறிச்சாரதி பி டபிளயு. பிரேமதாசா என்பவரைத் தடுத்து வைத்துள்ள பியூபிட்டியா பொலிஸார் தீவிர புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

## இம்மாதம் இரு கி.ச. தேர்தல்

உடுவில், செவ்

மானிப்பாய், புத்தூர் கிராமசபை தேர்தல்கள் இம்மாதத்தில் நடைபெறவிருக்கின்றன.

மானிப்பாய் கிராமசபைக்கான தேர்தல் இம்மாதம் 26-ம் திகதியும், புத்தூர் கிராமசபைக்கான தேர்தல் இம்மாதம் 29-ம் திகதியும் நடைபெறும்.

## சந்தேக நபர் சரண்

சாவகச்சேரி, செவ்

சாவகச்சேரிப் பொலிஸ் பகுதியை அடுத்துள்ள மறவில் என்ற இடத்தில் இராசமுத்து குலசிங்கம் என்ற 22 வயது வாலிபர் குத்திக் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக சாவகச்சேரிப் பொலிசாரால் தேடப்பட்டுவந்த மீசாலை வாசியெனக் கருதப்படும் கணபதி ரத்தினம் அல்லது குஞ்சன் என்பவர் மாஜிஸ்ட்ரேட் திரு கே. விக்கினராசா முன்னிலையில் சரணடைந்தார்.

மாஜிஸ்திரேட் சந்தேக நபரை 18-ம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## 15 தினங்கள் அன்னதானம்

யாழ்ப்பாணம், புதன்

அடுத்த மாதம் 25-ம் திகதி கதிர்காமத் திருவிழா ஆரம்பமாகின்றது இத் திருவிழா தொடங்குகின்ற தினத்திலிருந்து 15 நாட்களிலும் நல்லூர் கதிர்வேலாயுத சுவாமி மடாலயத்தில் அன்னதானமளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ந. நி)

## சைக்கிளில் மீன்விற்க லைசென்ஸ் பெறவேண்டும்

சாவகச்சேரி, செவ்.

சாவகச்சேரி மீன்சந்தையில் மீனுக்குக் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிப்பதெனவும், சந்தையின் மீனை வாங்கி வீதிகளில் விற்பனை செய்யும் சைக்கிள் வியாபாரிகள் மாதந்தோறும் 2 ரூபா கட்டி லைசென்ஸ் பெற வேண்டுமெனவும் நேற்று நடைபெற்ற சாவகச்சேரி நகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

சபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. சகல மீன் வியாபாரிகளும் லைசென்ஸ் பெற வேண்டுமென உப தலைவர் திரு. சி பாலசிங்கத்தினால் கொண்டுவரப் பட்ட இப்பிரேரணை திரு ஜெயரத்தினத்தால் கொண்டுவரப்பட்ட திருத்தத்துடன் நிறைவேறியது.

இப்பகுதியில் மீன்விலை உச்சக்கட்டத்தை அடைந்துள்ளமையாலேயே இக் கட்டுப்பாடு நிர்ணயிக்கப் பட்டுள்ளதாகச் சபையில் தெரிவிக்கப்பட்டது.

## பஸ்கள் நிற்க இடமில்லை

காங்கேசன்துறை, செவ்.

காங்கேசன்துறைச் சந்தியில் பஸ்கள் நிற்கவேண்டிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. முன்பு சந்திக்கருகாமையில் தனிப்பட்ட ஒருவரின் காணியில் காங்கேசன்துறைக்கு வரும் குறுகிய பஸ்சேவை பஸ்கள் தங்கிவந்தது. தற்போது இக்காணி அடைக்கப்பட்டதைத் தொடர்ந்து நடுச்சந்தியில் பஸ்கள் நிற்க வேண்டியேற்பட்டுள்ளது.

## முத்திரையில்லாததால் விண்ணப்பிக்கவில்லை

காங்கேசன்துறை, செவ்.

காங்கேசன்துறைத் தொகுதியில் அநேக தபாற் கந்தோர்களில் விலையுயர்ந்த முத்திரைகள் இல்லாததைத் தொடர்ந்து இங்கு சிலர் ஜி. சி. ஈ. [சாதாரண] பரீட்சைக்கு விண்ணப்பிக்க [illegible]

## 'தமிழையும் சைவத்தையும் பாரதத்திலும் பரப்பியவர் நாவலர்'

### பேராசிரியர் சுப்பிரமணியன்

யாழ்ப்பாணம், செவ்.

"தமிழையும் சைவத்தையும் தன்கண்கள் போல வளர்த்து அதனை ஈழத்தில் மட்டுமன்றி இந்தியாவிலும் பரப்பியவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரே. இவரைத் தமிழ் உலகின் தந்தை என்றும் கூறலாம். நாவலர் பிறந்த நல்லூரிலே பிறந்த எவரும் பேசும் திறனும். பேசும் ஆற்றலும் பெற்றிருப்பார்கள். இல்லாவிட்டாலும் அது அவர்களால் முடியும்."

இவ்வாறு நல்லூர்ச்சிவன் கோவிலில் நேற்று முன்தினமிரவு பேசிய பேராசிரியர் திரு வே. சுப்பிரமணியன் குறிப்பிட்டார்.

"அத்வைதம்" என்னும் பொருள்பற்றிஇவர் மேலும் பேசியதாவது:-

அத்வைதம் என்றால் சமய வழியில் நின்று காணவேண்டிருப்பதைக் காட்டுவதென்பதாகும். இது சைவசித்தாந்த சாத்திரங்களுக்குப் புறறம்பானதல்ல. சைவசித்தாந்த நெறியில் நிற்பவர்களில் இதனை நன்கு உணரமுடியும்.

ஏதோ ஒரு இடத்தில் ஒரு பொருளைக் குறிப்பதைத்தான் இப்பதம் விளக்குகின்றது. இதிலிருந்து அத்வைதம் என்பதுதான் சைவசித்தாந்தம் என்றும், சைவசித்தாந்தம் என்பது தான் அத்வைதம் என்றும் புலனாகின்றது.

வேதாந்த வாழ்க்கையில் 'அத்வைதம்' வழக்கிலிருந்து வருகின்றது. சைவ சித்தாந்தப் பழச்சாற்றுடன் அமுதத்தைக் கலந்ததுதான் வேதாந்தம். வேதாந்தம் கனிந்த அதன் சாறுதான் சைவசித்தாந்தம். இதிலிருந்து வேதாந்தமும் சைவசித்தாந்தமும் ஒன்றென்பதும் புலனாகிறது.

பழம்வேறு சாறுவேறு அல்ல பழத்திலுள்ள தேவையற்றவையை நீக்கி தேவையானவையைச் சேர்த்தது தான்பழச்சாறுஇப்படியான சாற்றை ஒத்தவைதான் வேதாந்தமும் சைவசித்தாந்தமும், அத்வைதமும்ஆகும்.

இன்றைய விஞ்ஞானப் போக்கு உலகுக்கு வாழும் வழியைக்காட்டாது அழிவையே கொண்டு வருகின்றது. இதனை மாணிக்கவாசகரே பலமேற்கோள்களுடன் காட்டியுள்ளார். இதனைச் சைவசித்தாந்தமும் நன்கு விளக்குகின்றது. இதனை மெஞ்ஞானிகள் என்றோ கூறிவைத்துவிட்டார்கள்.

பூமியைப்பற்றி விஞ்ஞானிகள் இன்று விளக்கும் தகவல்களை மெய்ஞானிகளின் சாஸ்திரங்கள் மூலம் தமிழர்கள் என்றோ அறிந்துவிட்டார்கள், இறைவன் ஒன்றாகவும், இரண்டாகவும் இரண்டறக்கலந்தும் இருக்கின்றான் என்பதையே இது விளக்குகின்றது.

உலகம் வேறு. இறைவன் வேறு. உலகுக்கு மேலாக இறைவன் இருந்து அருள் புரிகின்றான் என்பதே உண்மையானதாகும். எனவே ஆத்மாக்கள், ஆண்டவனுடன் கலந்து பேரின்பம்பெற வேண்டும். இதுதான் உலகில் நிரந்தரமான உண்மையான இடமாகும். [கா. நி.]

## "ஆசிரியர்களுக்கு 60 வயது ஒய்வு பெறும் வயதல்ல"

உடுவில், செவ்.

'ஆசிரியர்களுக்கு 60வயது ஒய்வு பெறும் வயதல்ல. உடல் நிலை ஓரளவு தளரலாம். ஆனால் அதேவேளையில்தான் அவரின் அறிவு முதிர்ச்சியடைகிறது. ஆசிரியர்கள் விட்டுச் செல்லும் அறிவுப்பாதை வருங்கால மாணவ சமூகத்தால் தொடர்ந்து நல்ல முறையில் இட்டுச் செல்லப்பட்டால் அதுவே ஆசிரியர்களின் சேவையை பாராட்டுவதற்கு ஒப்பாகும்."

உடுவில் முருக மூர்த்தி வித்தியாசாலையில் கடந்த 32 ஆண்டுகளாக ஆசிரியராகவும், உதவி அதிபராகவும் கடமையாற்றி ஒய்வு பெற்றுள்ள திரு. கே. சின்னத்தம்பிக்கு அப் பாடசாலை மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் அளிக்கப்பட்ட பிரியாவிடை வைபவத்துக்குத் தலைமை வகித்து பெரிய வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் திரு. கதிரவேலு மேற்கண்டவாறு கூறினார்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் திரு. கே. கிருஷ்ணபிள்ளை பேசுகையில் தற்காலக் கல்வித் திட்டமைப்பின் கீழ் மாணவர்கள் தொடர்ச்சியாகதிறமை வாய்ந்த ஒரு ஆசிரியரிடம் அறிவைப் பெற முடியாமலிருக்கிறது என்றும், தலைமை ஆசிரியரும் உதவி ஆசிரியரும் கணவன் மனைவியாக நிர்வாகத்தில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் கூறினார்.

திருவாளர்கள் கே. சிதம்பரநாதன், கே. கந்தசாமி, எம். கிருஷ்ணமூர்த்தி உட்பட பலரும் ஒய்வு பெற்ற ஆசிரியரைப் பாராட்டினர்

திரு. கே. சின்னத்தம்பி அளிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்தார்.

## 'வள்ளுவர் அரசியல் மேதை'

காங்கேசன்துறை. செவ்.

"சிறந்த அரசியல் தத்துவங்களையும், அமைப்புகளையும்கோட்பாடுகளையும் 2500 ஆண்டுகளுக்கு முன்னரே ஆக்கிய பெருமை திருவள்ளுவரையே சாரும்."

இவ்வாறு சமூகக் கலையியல் மன்றத்தின் சார்பில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் விழாவில் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரியின் தமிழ் விரிவுரையாளர் பண்டிதர் சச்சிதானந்தம் கூறினார்.

திரு. மு. தேவராசா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் பண்டிதர் சச்சிதானந்தம் தொடர்ந்து பேசுகையில், திருவள்ளுவர் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதிலிருந்து அவரது சிறப்பியல்புகள் வெளிவிடையாகுகின்றது என்றும், மாணவர்கள் திருவள்ளுவர் மீது வைத்துள்ள மதிப்பும் பிரதிபலிக்கிறது என்றும் கூறினார்.

## சுத்தானந்தரின் இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், புதன்

இன்று கவியோகி சுத்தானந்த பாரதியார், 9-00 மணிக்கு கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்திலும், 10-00 மணிக்கு செங்குந்தா இந்துக் கல்லூரியிலும், 11-00 மணிக்கு காரைநகர் இந்து மகாவித்தியாலயத்திலும், பி. ப 6 மணிக்கு கோண்டாவில் கிராம முன்னேற்றச் சங்கத்திலும் 7-00 மணிக்கு யாழ்ப்பாணம் மாநகர மண்டபத்திலும் உரையாற்றுவார். (ந. நி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வீடு:
கொக்குவிலில் நான்கு அறைகள் கொண்ட புதிய வீடு நான்கு பரப்பில் குளாய் நீர், மின்சக்தி வசதியுடன் றெயில்வே ஸ்ரேசன், ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடம், தபாற்கந்தோர். பஸ் நிலையம் ஆகிய மத்தியில் விற்பனைக்குண்டு. விபரத்திற்கு அ. செல்வரத்தினம், ஸ்ரேசன் ரேட் கொக்குவில். 1565

டியூட்டறியில் சொத்துக்கள், தளபாடங்கள், தட்டச்சு யந்திரங்கள், டிப்பிளிகேட்டிங்யந்திரம் முதலியன விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். தபால் நிலயம், நீர்வேலி. 1377

### காணவில்லை

எமது ஸ்தாபனத்தின் ஓடர் புஸ்தகம் இரண்டு [இல. 2300 தொடக்கம் 2500] காணவில்லை. இந்த இலக்கங்களுள்ள ஓடர் பத்திரங்களில் எழுதிவரும் ஓடர்களுக்கு எமது ஸ்தாபனம் பொறுப்பேற்க மாட்டாது. அன்னம்ஸ் சாறிவேகஸ், 27/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 1378

காணி உறுதி

மானிப்பாய் ஆஸ்பத்திரிப்பின் ஒழுங்கைக்கும் ரேஸ் பிறாண்ட் சொக்கலேட் தொழிற்சாலைக்குமிடையில் காணி உறுதிகள் இரண்டு தவறிவிட்டன. கண்டெடுத்து மானிப்பாய்-உடுவில் ரோட்டில் சொக்கலேட் தொழிற்சாலைக்கு முன்பாகவுள்ள வி. வி. இராஜரத்தினத்திடம் கொடுப்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். 1569

ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெமினி-சாவித்திரி
வீரப்பா
நடித்த
பத்தினித்தெய்வம்.

MANOHARA
JAFFNA
Daily 6-30, 10-00 P. M
Sudu Nangi
(சுது நங்கி)
(Sinhala)


வின்சர்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
நடித்த
தனிப்பிறவி

3வது வாரம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயாதினங்களில் 4 காட்சி
ஜெய்சங்கர்-கே.ஆர். விஜயா
நடிக்கும்
முகூர்த்த நாள்

REGAL JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 P M.
Doris Day & Rod Taylor
in
DO NOT DISTURB

| | | |
|---|---|---|
| இங்ஸ்லி | பிளாசா | லைலன் |
| வெலிங்டன் [யாழ்ப்பாணம்] | விஜயா [மட்டக்களப்பு] | ராஜ் [நீர்கொழும்பு] |
| ஸ்ரீகிருஷ்ணா [திருமலை] | விஜிதா [வட்டன்] | அயன் [மன்னார்] |

★ ஜெமினி கணேசன்
★ கே. ஆர். விஜயா
நடித்த



ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ் ராமு


யாழ். நகரில் நடந்த விறுவிறுப்பான கிரிக்கெட் மோதல்

# டாக்டர்களிடம் வழக்கறிஞர்கள் தோற்றனர்

## வழக்கறிஞர் கோஷ்டியில் மாஜிஸ்திரேட் ஜமீல் சிறந்த ஆட்டக்காரர்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் டாக்டர்களுக்கும் வழக்கறிஞர்களுக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் டாக்டர்கள் 4 விக்கெட்டுகளாலும் 146 ஓட்டங்களாலும் வெற்றியீட்டினர். இப்போட்டி நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய டாக்டர்கள் 7 விக்கெட் நஷ்டத்துக்கு 269 ஓட்டங்களைப் பெற்று தமது ஆட்டத்தை நிறுத்திக் கொண்டனர். இவர்களில் டாக்டர் நல்லையா ஆட்டமிழக்காமல் 75 ஓட்டங்களையும், டாக்டர்கள் கோஷ்டி காப்டன் டாக்டர் கணேசன் 56 ஓட்டங்களையும் பெற்றனர்.

டாக்டர்கள் கோஷ்டியில் விளையாடியோர் எடுத்த ஓட்டங்கள்:

விவேகானந்தன்-10, சற்குரு-08, சிவலிங்கம்-36, துரைரத்தினம்-44, முருகுப்பிள்ளை-01, துரைசிங்கம்-29 (ஆட்டமிழக்கவில்லை), கே. விக்கினராஜா-09, பஞ்சலிங்கம்-04 (ஆட்டமிழக்கவில்லை).

இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடிய வழக்கறிஞர்கள் கோஷ்டி சகல விக்கெட்டுகளையும் இழந்து 123 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இவர்களில் வழக்கறிஞர் என். இராசநாயகம் மட்டும் 46 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

வழக்கறிஞர்கள் கோஷ்டியில் விளையாடியவர்கள் பெற்ற ஓட்டங்கள்:

ஸ்ரீதரன்-08, வி. பாலசிங்கம்-01, ஜிம்மி இராசரத்தினம்-22, மாஜிஸ்டிரேட் வம். ஜமில்-03, அல்பிரட் துரையப்பா-06, நாகராஜா-18, அம்பலவாணர்-03, குணரத்தினம்-00 (ஆட்டமிழக்கவில்லை).

வழக்கறிஞர்கள் கோஷ்டியின் சிறந்த ஆட்டக்காரராக யாழ்ப்பாணம் மஜிஸ்டிரேட் திரு. எம். ஜமீல் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த துடுப்படி வீரராக வழக்கறிஞர் என். இராசநாயகமும், சிறந்த பந்தெறி வீரராக வழக்கறிஞர் ஜிம்மி இராசரத்தினமும் தெரிவு செய்யப்பட்டனர்.

டாக்டர்கள் கோஷ்டியின் சிறந்த ஆட்டக்காரராக டாக்டர் துரைரத்தினமும், சிறந்த துடுப்படி வீரராக டாக்டர் நல்லையாவும், சிறந்த பந்தெறி வீரராக டாக்டர் பஞ்சலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்.

போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. வி. எம். குமாரசாமி பரிசில்களை வழங்கினார். [சா. நி]

தமிழாசிரியர்களுக்கு உபசபாநாயகர் கூறுகிறார்:

# "அற்பசலுகைகளுக்கு முன்னும் பின்னும் திரிவதை கைவிடவேண்டும்"

யாழ்ப்பாணம், புதன்

"ஆசிரியர்களை மதித்துப் போற்றாத சமூகம் ஒருபோதும் முன்னேறமுடியாது. இந்த உண்மையை நமது சமுதாயத்தினரும், கல்வி அலுவலகத்தினரும் நன்குணரவேண்டும். அதே வேளையில் அற்ப சலுகைகளுக்காகக் கல்வி அலுவலக ஊழியர்களின் முன்னும், பின்னும் சுயமரியாதையை இழந்து திரியும் பழக்கத்தைத் தமிழாசிரியர்கள் கைவிடவேண்டும்"

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி.யும் உபசபாநாயகருமான திரு. மு. சிவசிதம்பரம் யாழ்ப்பாணம் மலாயா கபே மேல் மாடியில் ஆசிரியர் மணிதிரு நீ. இராசேந்திரத்துக்கு அளிக்கப்பட்ட பாராட்டு விழாவில் உரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

அகில இலங்கை சுவீகரிக்கப்பெற்ற தமிழ்ப்பாடசாலை ஆசிரிய சங்கத்தால் அளிக்கப்பட்ட இப்பாராட்டுவிழாவுக்கு சங்கத்தலைவர் திரு. எஸ். செல்லையா தலைமை வகித்தார்.

திரு. சிவசிதம்பரம் இராசேந்திரத்துக்கு பொன்னாடை போர்த்திப் பதக்கம் சூட்டினார். அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது!

இங்கிலாந்தில் திரு. இராசேந்திரம் 36 ஆண்டுகாலம் சேவையாற்றியிருப்பின்மகாராணியினால் 'சேர்' பட்டம் வழங்கிக்கௌரவிக்கப்பட்டிருப்பார். ஆனால் நமது நாட்டில் அந்த நிலையில்லை. இங்கிலாந்து நாட்டின் கல்வியமைச்சர் புதிய கல்வி மசோதாவைக்கொண்டுவருமுன் அங்குள்ள ஆசிரிய சங்கத் தலைவரைத் தேடிச்சென்று அவரது அபிப்பிராயங்களை முதலில் கோருகிறார். ஆனால் நமதுநாட்டிலோ கல்வியமைச்சரவையிலுள்ள சாதாரண உத்தியோகத்தரையோ பேட்டிகாண ஆசிரிய சங்கத் தலைவர்கள் நான்கணக்காகத் தவம்கிடக்கநேரிடுகிறது.

இதற்குக்காரணம் நமது ஆசிரியர்களின் பலவீனம் தான். ஆசிரிய சமுதாயம் ஒன்றுபட்டு ஒரே அணியில் தங்கள் உரிமைகளைப்பெற முன்வரவேண்டும்.

இன்றைய மாணவர்கள் ... கல்விபெறுவதன் குறிக்கோள் ... மனப்பான்மை முற்றுமாற வேண்டும். இதை ஏற்படுத்தும் சக்தி ஆசிரியர்களுக்குத்தான் உண்டு.

திரு. ஆர். என். சிவப்பிரகாசம், திருமதி எஸ். சுவாமிநாதன், திரு. த. துரைசிங்கம், திரு. கா. முருகப்பா ஆகியோர் பாராட்டுரை நிகழ்த்தினர். தமக்களிக்கப்பட்ட கௌரவத்துக்குத் திரு. இராசேந்திரம் நன்றி தெரிவித்துப் பேசினார். திரு. த. திருநாவுக்கரசன் நன்றி கூறினார். (கா. நி.)

## சமயங்கள்பல முடிவுஒன்றுதான்

### கவியோகி கருத்து

அளவெட்டி, செவ்

"உலகில் உள்ள பல்வேறு சமயங்களெல்லாம் இந்து சமயத்தின் அடிப்படையிலிருந்துதான் தோன்றின" என இலங்கைக்கு விஜயம் செய்துள்ள கவியோகி சுத்தானந்தபாரதியார் பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் விசேஷசொற்பொழிவாற்றுகையில் கூறினார்.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மண்டபத்தில் நேற்று முன்தினம் மேற்படி கலாசாலை அதிபர் திரு. சி. கந்தசாமி தலைமையில் இச்சொற்பொழிவு நிகழ்ச்சி நடைபெற்றது.

கவியோகி சுத்தானந்த பாரதியார் தொடர்ந்து பேசுகையில் உலகிலுள்ள எல்லாச் சமயங்களையும் ஆராய்ந்து பார்த்தபோது இந்து சமயத்தின் அடிப்படையிலிருந்துதான் மறுசமயங்கள் தோன்றியதாகவும் தெரியவருகிறது.

சமயங்கள் பல இருந்தபோதிலும்எல்லாச்சமயமும் ஒரு முடிவுக்குத்தான் வருகிறது.

உலகிலுள்ள மொழிகளில் நான் 14 மொழிகளைப்படித்திருக்கிறேன். ஆனால் சிங்கள மொழியில் அதிக தேர்ச்சியடையவில்லை.

அரபு மொழியைப்பயின்று இஸ்லாமிய சமயத்தவனாகவே மெக்காவுக்குச்சென்றேன். அச்சமயமுறைப்படி அவர்கள் பிரார்த்தனை செய்தாலும் நான் பொதுவான முறையில் மலர்களால் அர்ச்சித்தேன்' என்று கூறினார்.

## மலலசேகரா யாழ். வருவார்

குரும்பசிட்டி, செவ்.

தேசிய உயர்கல்விச்சபையின் தலைவர் டாக்டர் ஜீ. பீ. மலலசேகரா அடுத்த மாதம் 8-ந் திகதி விமானமூலம் யாழ்ப்பாணம் வருகின்றார். தமது மனைவியுடன் யாழ். நகர் விஜயம் செய்யும் இவர் மூன்று தினங்கள் இங்கு தங்கியிருப்பார். கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த இராப்போசன விருந்து, சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழா ஆகிய வைபவங்களில் இவர் பிரதம அதிதியாக கலந்து கொள்வார். நயினாதீவு நாகதீப பௌத்தவிகாரை, நாகபூஷணி அம்பாள் ஆலயம் என்பவற்றிற்கும் திரு. மலலசேகரா விஜயம் செய்வார்.


### விளம்பரம்

## கேள்வி விளம்பரம்

எழுவைதீவுக் கிராமசபை தலைவரால் 1968-ம் ஆண்டு யூன் மாதம் 28-ந் திகதி [28-6-68] காலை 10-30 மணிவரை வீதி, கிணறு, துறைமுகப்பால வேலைகளுக்கான சீல் வைத்த கேள்விப் பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன. கேள்விப்பத்திரங்கள் கேள்விப்பத்திரப்பணமாக ரூ. 10/-ம் கேள்விப் பிணைப்பணமாக ரூ. 100/-ம் செலுத்தியதன் பேரில் பெற்றுக் கொள்ளலாம். மற்றைய விபரங்கள் கிராம சபை அலுவலகத்திலும், உ. ஆ. உ. ஆணையாளர், [யாழ்ப்பாணம்] அலுவலகத்திலும் அறிந்துகொள்ளலாம்.

[ஒப்பம்]
இ. வைத்தியலிங்கம்
தலைவர்,
கி. ச. எழுவைதீவு.

கிராமசபை அலுவலகம்,
எழுவைதீவு.
16-6-68.

840


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பிரிட்டன் கைவிடும் இடத்தை ஆஸ்திரேலியா ஆக்கிரமிக்காது

கொழும்பு, திங்கள்

பிரிட்டன் இந்து சமுத்திர பிராந்தியத்திலிருந்து தனது ராணுவத்தளங்களை அகற்றிக்கொண்டதும் அந்த இடத்தில் ஆஸ்திரேலியா இருந்துகொள்ள விரும்பவில்லை என்று ஆஸ்திரேலியா வெளிநாட்டு மந்திரி திரு. ஹாஸ்லக் இன்று பத்திரிகை நிருபர்களிடம் கூறினார்.

திரு. ஹாஸ்லக் இலங்கையிலிருந்து புறப்படுவதற்கு முன் நடத்திய பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் மேலும் பேசுகையில், ஆஸ்திரேலியா தென்கிழக்காசிய பிராந்தியத்தின் பாதுகாப்பில் கவனம் செலுத்தி வரும் என்று கூறினார்.

# இந்து சர்வகலாசாலை நிறுவ நடவடிக்கை

## சைவ அனுட்டான சபை தகவல்

அளவெட்டி, திங்கள்

"சைவசமயத்தையும், சைவ கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் சிதைவுறுவண்ணம் பாதுகாத்து முன்னேறச்செய்வதற்கு ஓர் இந்து சர்வகலாசாலை அவசியம் தேவை. இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது."

இன்று நடைபெற்ற அகில இலங்கை சைவ அனுட்டான சபையின் முதலாவது ஆண்டு நிர்வாக சபை அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கீரிமலை சிவன்கோவில் மண்டபத்தில் இச்சபையின் வருடாந்தக்கூட்டம் திரு. த. சிவலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இவ்வறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

பூர்விக சரித்திர புராணகாலந்தொடக்கம் சைவ மக்களால் ஒரு புனித தலமாக பேணப்பட்டுவரும் கீரிமலையை புனித நகராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

இலங்கை சைவமக்களுக்கு தலைமைப்பீடமாய் வேத சிவாகமங்களிலும், புராண இதிகாசங்களிலும் மற்றும் நூல்களிலும் பாண்டித்தியமுடைய சைவ அனுட்டான சீலர்களும் தகைமைவாய்ந்த 5 சைவமகா உத்தமர்களைக் கொண்ட சைவப்பீடமொன்றை நிறுவவேண்டுமெனவும், ஆரம்பத்தில் ச. குமாரசுவாமிக்குருக்கள், கு. பாலசுந்தரக் குருக்கள், கா. கைலாசநாதக் குருக்கள், ஞா. சபாபதிதேசிகர், த. குமாரசுவாமிப்புலவர் ஆகியோர் அங்கத்துவம் வகிக்கவேண்டுமெனவும், இத் தீர்மானம் மகாசபையின் அங்கீகாரம் பெறல் வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

சைவக்கோயில் உட்பிரகாரத்தில் எந்த இடத்திலாவது சைவவிவாகக்கிரியைகள் நடைபெறக்கூடாது. வெளிமண்டபங்களில் நடைபெறலாம்.

பெண்களை விவாகப்பதிவுகாரராக நியமனம்செய்வது எங்கள் சமயக் கொள்கைக்கு மாறுபடியால் பெண்களை விவாகப்பதிவாளராக நியமிக்கக் கூடாது.

மரவரியை நீக்கவும் நடவடிக்கை எடுக்கிறோம்.

# பெண் கொலை: ஒருவர் கைது

நல்லூர், திங்கள்

இளாவி ஐயனார்கோவில் முன்றலில் காய்கறி வெட்டிக்கொண்டிருந்த 50 வயது பெண் ஒருவர் தலைவேறு உடல்வேறாக வெட்டிக் கொலைசெய்யப்பட்டதாக அறியப்படுகின்றது. ஆடு வெட்டுவதற்கு பாவிக்கப்படும் கத்தியாலேயே இப் பெண் வெட்டப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படுகின்றது. இதுசம்பந்தமாக ஒரு ஆளை பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

நேற்று முன்தினம் வேற்படி கோவிலில் பொங்கல் ஒன்று நடந்ததாகவும், அங்கு காய்கறி வெட்டிக்கொண்டிருந்த நாகம்பா என்பவரை முருகேசு செல்லையா (வயது 58) ஆடுவெட்டும் கத்தியால் வெட்டியதாகவும் கூறப்படுகிறது.

பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. கனகராசா ஸ்தல விசாரணை நடாத்தி, சந்தேகநபரை 25-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார். பளைப் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி திரு. இராஜசபா தொடர்ந்து விசாரணை நடத்துகிறார்.

## பெற்றோர் தின விழா

அநுராதபுரம், செவ்

அநுராதபுரம் விவேகானந்த தமிழ் மகா வித்தியாலய பரிசளிப்பும் பெற்றோர் தினவிழாவும் இம்மாதம் 22-ந் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு வ. ம. மாநிலக் கல்வி அதிபதி திரு எஸ் பி குணசேகரா தலைமையில் நடைபெற இருக்கிறது. உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். திருமதி மு. திருச்செல்வம் பரிசில்களை வழங்குவார்.

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் முஸ்லிம் பகுதியிலுள்ள உபதபால் நிலையத்துக்கு நேற்று முதல் தந்தி, தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

## 'நீர் ஓர் அதிஷ்டசாலி' நீதியரசர் சொன்னார்

காலி, செவ்

'நீர் ஒரு அதிஷ்டசாலி' என கொலை முயற்சி வழக்கில் எதிரியான பி.கே. குணசேனாவை விடுதலை செய்து தீர்ப்பளித்தபோது காலி அசைஸ் கோர்ட்டு நீதியரசர் திரு. எஸ். ஏ. விஜயதிலகா குறிப்பிட்டார்.

இவ்வழக்கில் வெல்லவெலாவைச் சேர்ந்த பி. கே. குணசேனா என்பவர் 64-ம் ஆண்டு ஏப்ரல் 6-ம் திகதி கமிஸ் அமரகுணவர்த்தனவை கொலை செய்ய முயற்சித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது

நான்கு நாள் விசாரணையின் பின் ஜூரி சபையினர் ஏகமனதாக எதிரி சுற்றவாளியெனத் தீர்ப்பளித்தனர். இதைத் தொடர்ந்து நீதியரசர் எதிரியை விடுதலை செய்தார்.

## துணுக்காய் கி. ச. தேர்தல் முடிவுகள்

யாழ்ப்பாணம், புதன்

துணுக்காய் கிராமசபைத் தேர்தலில் இருவர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆறு வட்டாரத்தில் 12 பேர் போட்டியிட்டனர்.

முதலாம் வட்டாரம்;— வி. சிற்றம்பலம் 144, ஏ. குலசேகரம் 110, கே. சுப்பையா 66.

இரண்டாம் வட்டாரம்:— என். ஆறுமுகம் 21, ரி.கந்தசாமி 18.

மூன்றாம் வட்டாரம்;— வி. கந்தசாமி (போட்டியின்றித் தெரிவு)

நான்காம் வட்டாரம்:— எம். எஸ். தம்பையா 313, என். ஆழ்வாப்பிள்ளை 85.

ஐந்தாம் வட்டாரம்;— வி. வனலிங்கம் [போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்]

ஆறாம் வட்டாரம்:—எஸ் துரைசிங்கம் 67, எஸ் முருகேசு 37, வி. சின்னத்துரை 30

[ந. நி]

## 24 மணி நேரமும் இயங்குகிறது

அநுராதபுரம், செவ்.

இப்போது அநுராதபுர பஸ் நிலையம் 24 மணி நேரமும் இயங்கிக்கொண்டிருக்கிறது. கதிர்காம ஆலயத்துக்கு இங்கிருந்து நேரடி பஸ் சேவை இப்போது நடைபெற்றுவருகிறது. முன்னரிலும் பார்க்க இப்போது அநுராதபுரம் பஸ் சேவை மிகவேகமான முன்னேற்றமடைந்துள்ளதென்றே கூறலாம். திருடர்களிடமிருந்து மக்களைக் காப்பாற்ற பஸ் நிலையத்தில் பொலிஸார் தீவிரகண்காணிப்பு செய்து வருகின்றனர்.

பொசன் பண்டிகையின் போது திறம்படச்சேவை செய்ததற்காக சமீபத்தில் அநுராதபுர இ. போ. ச. பிரதமரது பாராட்டைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

## 14 மலேஷிய பொலிஸார் கொல்லப்பட்டனர்

கோலாலம்பூர், ஜூன் 18

மலேஷியா - தாய்லாந்து எல்லையில், கம்யூனிஸ்ட் தீவிரவாதிகள் மறைந்திருந்து நடத்திய தாக்குதலொன்றில் 14 மலேஷியப் பொலிஸார் கொல்லப்பட்டனர். ... பொலிஸாருக்குத் ... [illegible]

## இ.போ.ச. பஸ் சாரதி கைது

நல்லூர் செவ்

இ. போ. ச; பஸ் சாரதி பொருளர் நான்கு குழந்தைகளுக்குத் தாயான ஒருவருடன் தவாதமுறையில் நடக்க முயற்சி செய்ததாக சந்தேகத்தின்பேரில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய உதவி இன்ஸ்பெக்டர் ஜனுப்முஸாபரினுல் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் பஸ் டிப்போவைச் சேர்ந்த இச்சாரதி யாழ், பஸ் நிலையத்தில்தான் கைது செய்யப்பட்டார்.

சந்தேகத்தின்பேரில்கைது செய்யப்பட்ட பஸ் சாரதியான கே. அருளம்பலம் இதற்கு உடந்தையாக இருந்ததாகக் கருதப்படும் பொன்னையா என்பவரும் இப்போது பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

## கிங்குக்குப் பதில் டாக்டர் நைல்ஸ்

பண்டத்தரிப்பு, செவ்.

அடுத்தமாதம் 4-ம் திகதி சுவிடனில் நடைபெறவிருக்கும் உலகக்கிறிஸ்தவ சபை மகாநாட்டில் ஆரம்ப உரை நிகழ்த்த கலாநிதி வண. டீ. ரீ. நைல்ஸ் அழைக்கப்பட்டுள்ளார். இதற்குமுன் திரு. மார்ட்டின் லூதர் கிங்கே உரைநிகழ்த்த இருந்தார்.

## இன்றைய பலன்

[19 - 6 - 68]

ஆனி மீ 6 உ

புதன்கிழமை

திதி- நவமி மாலை 5-59 மேல் தசமி.

நட்சத்திரம்- உத்தரட்டாதி. காலை 6-10 வரை. மேல் ரேவதி.

ராகுகாலம் - 11-54— 1-24

சுபநேரம் - 4-24— 5-24

இன்று பிறந்தவர்களுக்கு: விவசாயிகளுக்கு வெற்றிக்குரிய ஆண்டாகும். தனம் சேரும். தானிய விருத்தி உண்டு. குடும்பத்தில் கொண்டாட்டம். கன்னியர் வாழ்வில் களிப்பு. கல்வி நலன் தரும் நல் ஆண்டாகும்.

மேஷம்- நிதியில் அபிவிருத்தி, நிம்மதி பிறக்கும்.

ரிஷபம்- அக்னிய வாசம், அகால போசனம்.

மிதுனம்- அறிவுத்தாகம், ஆக்க மிகுதி.

கடகம்- இன்பம் பொங்கும், இனசன மகிழ்ச்சி

சிம்மம்- துன்பத்தின் நிழலாட்டம், துயர் படிந்த நாள்.

கன்னி- வாழ்வுப் பயணத்தில் வளமான திருப்பம்.

துலாம்- சிநேகிதர் பகை, சிந்தையில் குழப்பம்.

விருச்சிகம்- முதியோர் ஆசி, முடிவில் வெற்றி.

தனுசு- தொழிற் பெருமை, துன்பம் மடியும்.

மகரம்- உபகாரசிந்தை உள்ளப்பூரிப்பு.

கும்பம்- சிந்தனைக் குழப்பம், செயலில் பதட்டம்.

மீனம்- குமுறும் நெஞ்சம், குறைகேட்க நேரிடும்.

— சோதிடக்கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

25 வருடமாக

## நிபுணர்களை உருவாக்கவில்லையாம்

கொழும்பு, செவ்.

இலங்கை பல்கலைக்கழகம் 25 வருடகாலமாக விவசாய, கைத்தொழில் துறைகளில் நிபுணர்கள் ஒருவரையும் உருவாக்கவில்லையென்று இலங்கை விஞ்ஞான அபிவிருத்திக் கழகம் கூறுகிறது.

இந்தத் துறைகளில் நிபுணர்களை உருவாக்குவதற்கு நம் நாட்டிலிருந்து திறமைசாலிகளை வெளிநாடுகளுக்கு பயிற்சிபெற அனுப்பிவைக்க வேண்டுமென இலங்கை விஞ்ஞான அபிவிருத்திக் கழகம் அரசாங்கத்துக்குச் சிபாரிசு செய்துள்ளது.

## வைத்தீஸ்வரா மாணவர் இருவருக்கு பரிசு

யாழ்ப்பாணம், புதன்

இலங்கை முஸ்லிம் கல்வி சகாய நிதியால நடாத்தப்பட்ட இஸ்லாம் சமயம் சம்பந்தமான பரீட்சையில் வைத்தீஸ்வராக் கல்லூரியைச் சேர்ந்த இரு மாணவர்கள் பரிசு பெற்றுள்ளனர்.

21 வயதுக்கு உட்பட்ட மாணவர்களுக்காக நடாத்தப்பட்ட பரீட்சையில் இங்கு கல்வி பயிலும் ஏ எச். அப்துல்கையூம் என்ற மாணவன் முதலாம் பரிசாக 100 ரூபா பெற்றுள்ளார்.

16 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கான போட்டியில் எஸ். ஏ. சி. மக்ரூப் என்ற மாணவன் 3வது பரிசாக 50 ரூபா பெற்றுள்ளார். [கா. நி]

## 'ஆசிரியர்களை உடன் நியமிக்கவும்'

நயினாதீவு, செவ்.

"நயினாதீவு கணேசா கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் இருந்துமாற்றலாகிச்சென்ற ஆசிரியர்களின் இடங்களுக்கு பல மாதங்களாகியும் ஆசிரியர்கள் நியமிக்கப்படாமையினால் இங்குள்ள பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுகிறது. ஆகவே உடனே ஆசிரியர்களை இங்கு நியமிக்கவும்"

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை நயினாதீவு கிராமசபை வடபகுதிக்கல்விப்பகுதியினர்க்கு அனுப்பி வைத்துள்ளது.

## ஒற்றையாட்சி......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தனது தந்தையின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தைக் காட்டி நிரூபிக்கும்வரை தமிழர் ஒரு கள்ளத் தோணியாகவே கருதப்படுகிறார்.

திருக்கோணமலையில் 500 தமிழர்களுக்கென ஒதுக்கப்பட்ட முடிக்குரிய காணிகள் இவர்களுக்கு வழங்கப்படாது பதில் 75 நடுத்தர சிங்கள வகுப்பு மக்களுக்கு வழங்கப்பட்டது. திருமதி ஆர். ஜி சேனநாயகாவும் இதில் ஒரு துண்டு காணி பெற்றார்.

### ஒப்பந்தம்

திரு டட்லி சேனநாயக்காவுக்கும் திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகத்துக்குமிடையே செய்யப்பட்டுள்ள ஒப்பந்தம் தமிழரை ஏமாற்றும் ஒரு ஒப்பந்தம்.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் ஒற்றையாட்சி முறையோ திரு செல்வநாயகத்தின் மாவட்ட சபை முறையோ தமிழ் மக்களின் பிரச்னைகளைத் தீர்க்க மாட்டாது.

தமிழர்கள் தமது எதிர்காலத்தைத் தீர்க்கமாகத் தீர்மானிப்பதற்கு காலம் கடந்து விடவில்லை. தமிழர்கள் மிகவும் அவதானத்துடன் சிந்தித்துச் செயலாற்ற முன்வர வேண்டும்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேல வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜூன் மாதம் 19-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org